விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 323 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 21 திங்கட்கிழமை (07.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P. 021 720 1005
இல.144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## மாவீரர்களை நினைவு கூர்ந்தால் கடும் நடவடிக்கை

### பொலிஸார் மிரட்டல்

*(மன்னார்)*

மாவீரர் தின நினைவேந்தலில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மன்னார் அடம்பன் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

*(11 ஆம் பக்கம் பார்க்க)*

### A9 வீதியில் பயணிக்கும் தனியார் பேருந்துகளை சோதனைக்கு உட்படுத்தவும்

**வடக்கு ஆளுநர் பணிப்புரை**

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து சேவையில் ஈடுபடுத்தப்படும் வெளி மாவட்டங்களுக்கான தனியார்

11

### போதைப்பொருள் வர்த்தகம்



**யாழில் மூவர் கைது**

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடுப் பகுதியில் கஞ்சா கலந்த மாவா போதைப் பொருளை விற்பனைக்கு வைத்திருந் தவரும்

11

## முதியவர்களை குறிவைத்து திருட்டுக்கள் அதிகரிப்பு

### அவதானமாக இருக்குமாறு பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டை கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

அதிகாலை 1.30 மணியளவில் கன மழை பொழிந்து

11

## போதை வியாபாரத்தைக் கட்டுப்படுத்த வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை எம்மிடம் ஒப்படையுங்கள்

### பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்

*(யாழ்ப்பாணம்)*



**போதைப்பொருள் வியாபாரத்தை கட்டுப்படுத்த வேண்டுமாயின் வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை எம்மிடம் தாருங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரின் உரிமைப் போராட்டம் குறித்த சிந்த

04

## லிட்ரோ எரிவாயுவின் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலைகள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 80 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 4,360 ரூபாய் ஆகும்.

5 கிலோ கிராம் லிட்ரோ

11

## புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 50 கைதிகள் தப்பியோட்டம்

(பொலன்னறுவை)

பொலன்னறுவை, வெலிகந்த, கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்திலிருந்து சுமார் 50 கைதிகள் தப்பிச்

11

## பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்க நடவடிக்கை

### நீதியமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை முற்றாக நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் விவகாரங்கள் அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



இதனடிப்படையில் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை முற்றாக மீளாய்வு

04

## பேருந்திலிருந்து தவறி விழுந்தவர் பலி

(சாவகச்சேரி)

பேருந்தில் இருந்து தவறி விழுந்த தாதிய உத்தியோகத்தர்

11

## பலாலியில் விமானத்தை இறக்க இந்தியா தயக்கம்

### அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

பலாலியில் விமானத்தை இறக்க இந்தியா விரும்பவில்லை என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

11

## மாட்டுடன் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சிப் பகுதியில்

04

## 3 இலட்சம் ரூபாய் பணம் சுதுமலையில் திருட்டு

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதுமலை வடக்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 3 இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரம் ரூபாய் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வீட்டில் உள்ளவர்கள் மேல் மாடியில் தூங்கிவிட்டு நேற்று காலை எழுந்து வந்து கீழே பார்த்தவேளை வீடு உடைக்கப்பட்டிருந்தமை

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருவையாறு திருமகள்
சி.க.கூ. சங்கத்தின் தலைவர்

**திரு. சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை**

கரைச்சிப் பிரதேச சபையின் பண்பாட்டு விழாவில் சிறந்த கூட்டுறவாளருக்கான விருதைப் பெற்றுக் கொண்ட எமது தலைவர் அவர்களது வாழ்நாள் நீடித்த கூட்டுறவுச் சேவையை பணிநயந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

உறுப்பினர்கள்
திருமகள் சி.க.கூ சங்கம்
திருவையாறு மேற்கு.

(C-5227)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## வேலையாட்கள் தேவை

யாழ்.திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்திற்கு கீழ்வருவோர் தேவை.

1. முகாமையாளர் - A/L சித்தியடைந்த 30க்கும் 50க்கும் இடையில் வயதெல்லையும் அனுபவமும் உடையவர்கள்.
2. கணக்கியல் பயிலுனர் – A/L வர்த்தகப் பிரிவில் சித்தியெய்தியவர்கள் AAT, HNDA மாணவர்கள். (13379)

தொடர்பு - 074 368 0029

## வேலையாட்கள் தேவை

யாழ்.இந்து அருகில் உள்ள அச்சகத்திற்கு

- கணனி ரைப் செற்றிங் தெரிந்தவர்கள் (Corel DRAW, Photoshop)
- மெசின் மைண்டர் (Kod)
- புத்தகம் கட்டுனர்

அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
பகுதிநேரம் வேலை செய்ய விரும்புவர்கள் தொடர்பு கொள்ளவும்.

075 150 6234, 077 250 6234

(13371)



கொழும்பில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். அவர்களின் புகைப்படம் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

# 7ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முத்தர்
**திருநாவுக்கரசு**

பிறப்பு: 11.04.1941 இறப்பு: 08.11.2015

உழைப்பின் உன்னதத்தை
எமக்குணர்த்திய எம் அப்பாவே-
நீங்கள் மறைந்து ஏழாண்டாகியும்
உங்கள் நினைவுகள்
எம் மனங்களில் இருந்து
மாறவில்லை அன்புத் தெய்வமே

மனைவி, பிள்ளைகள்
கராஜ் லேன், சண்டிலிப்பாய்.

(13370)

## மரண அறிவித்தல்

# செல்வராசா பாக்கியம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா பாக்கியம் அவர்கள் நேற்று (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்வராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் (கனடா) சகோதரியும் விக்னேஸ்வரமூர்த்தி (ஓய்வுநிலை நீதிமன்றப் பதிவாளர்), கந்தசாமி (ஓய்வுநிலை அதிபர்), ஆறுமுகராசன் (கனடா), தவமணிதேவி (லண்டன்), செல்வராணி (லண்டன்), இராஜேஸ்வரி (ஜேர்மனி), ஞானசவுந்தரி (நோர்வே) ஆகியோரின் தாயாரும் பாலசிங்கம், கமலாதேவி, சிவமணி, பாஸ்கரலிங்கம், பாலசுப்பிரமணியம், செல்வலஷ்மி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விஜிதா (பணிப்பாளர் - பல்கலைக்கழகக் கல்லூரி, யாழ்ப்பாணம்), வனிதா (மேல்நீதிமன்றம் - யாழ்ப்பாணம்), ஜெயகாந்தன் (பொறியியலாளர் - கனடா), மேனகா (விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்), சிவசங்கர் (மாணவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி), சாட்சா, ஆர்த்திகா, அர்ச்சனா (கனடா), காலஞ்சென்ற கணேசதாசன், குகதாசன், வாசுகி, சிவதாசன், மயூரி, நிலானி, நிரோசன், நிசானி (லண்டன்), ஜெகதா, சிறிகரன் (ஜேர்மனி), நிவேதன், விதுசன் (நோர்வே), ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2022) திங்கட்கிழமை நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

பாடசாலையடி,
இராசவீதி, நீர்வேலி. (13378)

077 704 0215, 077 609 3760

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 – 01 – 1936



இறப்பு 05 – 11 – 2022

# திரு. துரைச்சாமி வாமதேவன்

(ஓய்வுபெற்ற பெருந்தோட்ட உத்தியோகத்தர்,
அகில இலங்கை சமாதான நீதவான்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.துரைச்சாமி வாமதேவன் அவர்கள் (05.11.2022) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - அம்பிகை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜசிங்கம் -கன்கேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற பிரேமகுமாரியின் அன்புக் கணவரும் லிங்கேஷன் (நியூசிலாந்து), அகிலேஷன் (கனடா), கிர்த்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், சகாதேவன், ஞானேஸ்வரி, பாலதேவன் மற்றும் ஞானதேவன், ஞானதேவி ஆகியோரின் சகோதரரும் சங்கீதா (நியூசிலாந்து), துஷ்யந்தி (கனடா), உமாசுதன் ஆகியோரின் மாமனாரும் கணஷியாம் (நியூசிலாந்து), நேத்திரன், ஆயுஷி(கனடா), நவனிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.11.2022) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 585 3803,
077 937 0208 (13375)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்கியே தீருவோம்-நீதியமைச்சர்

(கொழும்பு)

**அரசியல் தீர்வே தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு. அதை நாம் புதிய அரசமைப்பின் ஊடாக நிறைவேற்றியே தீருவோம் என நீதி அமைச்சர் விஜதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் எம்மை சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகளும் புதிய அரசமைப்பு தொடர்பிலும் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் முக்கியத்துவம் வழங்கி கலந்துரையாடி வருகின்றனர். எனவே இந்த கருமத்தில் நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஒரு வருடத்துக்குள் தீர்வுக்கான அனைத்து பணிகளும் நிறைவுக்கு வரவேண்டும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கு முன் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், காணி விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து அதற்குரிய தீர்வுகளை அரசு வழங்கும். அதன் ஓர் அங்கமாகவே கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள்.

நல்லாட்சி அரசியல் தீர்வு விடயத்துக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது.

ஆனால் தற்போது கூட்டமைப்பின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்று அர்த்தமில்லை. ஒத்துழைப்பு கிடைக்கிறது. ஆனால் அந்த ஒத்துழைப்பு முழுமையான ஒத்துழைப்பாக இருக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கில் காணி விவகாரம் தொடர்பில் பல முறைப்பாடுகளை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் எம்மிடம் முன்வைத்துள்ளனர்.

இவை தொடர்பில் ஆராய்ந்து விரைவில் தீர்வு காண்போம். எந்தத் தரப்பும் பாதிக்காத வகையில் நாம் தீர்மானங்கள் எடுப்போம் என அவர் தெரிவித்தார். (நி)

## தேர்தலை ஒத்தி வைக்க தீர்மானித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் பல்வேறு காரணங்களை முன்வைக்க தயாராகுமானால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்;

நாளை செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## ஜனாதிபதியின் கீழ் முக்கிய அமைச்சுகள்

### அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

(கெழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு முக்கிய அமைச்சுக்களை தொடர்ந்தும் வகிப்பதற்கான அதிவிசேட வர்த்தமானி நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 44(3) இன் கீழ் பிரதமருடன் கலந்தாலோசித்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர், தொழில்நுட்ப அமைச்சர், மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு ஆகிய பொறுப்புக்களை ஜனாதிபதி தொடர்ந்தும் வகிக்க தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## 15 நாட்களுக்கான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் உள்ளது

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் 15 நாட்களுக்குத் தேவையான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உரிய முறையில் எரிபொருள் கொள்வனவு செய்யப்படாமை காரணமாகவே எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும் எதிர்வரும் நாட்களில் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## இலங்கை கிரிக்கெட் அணி வீரர் அவுஸ்திரேலியாவில் கைது

(சிட்னி)

இலங்கை கிரிக்கெட் அணி வீரர் தனுஷ்க குணதிலக்க கைது செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் நேற்று முன்தினம் அவர் அந்நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண் ஒருவர் அளித்த முறைப்பாட்டுக்கமைய அவர் கைது செய்யப்பட்டதாக ஸ்ரீ லங்கா கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் தனுஷ்க குணதிலக்க இல்லாமல் இலங்கை கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவிருந்து கொழும்புக்கு புறப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. (நி)

## 5.7 மில். இலங்கையர்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளது

### செஞ்சிலுவைச் சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)


நாட்டின் மொத்த சனத்தொகையில் குறைந்தபட்சம் 5.7 மில்லியன் மக்கள் மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

செஞ்சிலுவை மற்றும் செஞ்சிலுவை சங்கங்களின் சர்வதேச கூட்டிணைவு இதனைத் தெரிவித்துள்ளது.

அது மாத்திரமன்றி உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் கட்டமைப்பு ரீதியிலும் சேவை வழங்கலிலும் ஏற்பட்டிருக்கும் சீர்குலைவை சீரமைப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிடின் மேற்குறிப்பிட்ட தொகை மேலும் அதிகரிக்கும் எனவும் அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் மேலும் தீவிரமடையும் எனவும் எச்சரித்துள்ளது.

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் தீவிர பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாட்டுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையிலேயே செஞ்சிலுவை மற்றும் செஞ்சிலுவை சங்கங்களின் சர்வதேச கூட்டிணைவு மேற்குறிப்பிட்டவாறு எச்சரித்துள்ளது. (நி)

## இலங்கைக்கு கடத்தவிருந்த 774 கிலோ பீடி இலைகள் மீட்பு



(சென்னை)

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக பீடி இலைகளை கடத்தி மீன் லொறியொன்றில் கொண்டு செல்ல முற்பட்டபோது நேற்று [illegible] பகுதியில் வைத்து குறித்த லொறியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு சட்டவிரோதமாக பீடி இலைகளை கடத்திச் செல்வதாக நுரைச்சோலைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த லொறியைப் பின்தொடர்ந்து சென்ற வேளை லொறியை நிறுத்திவிட்டு சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது, ரெஜிபோர்ம் பெட்டியினுள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 774 கிலோ பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பீடி இலைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய லொறி ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். குறித்த பீடி இலைகளின் பெறுமதி 46 இலட்சம் என மதிக்கப்பட்டுள்ளது.

தப்பியோடிய சந்தேகநபர்கள் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழ...

னையை இளைஞர்களிடத்தில் மழுங்கடிக்கும் நோக்குடன் போதைப்பொருள் விற்பனையையும், பாவனையையும் வடக்கு மாகாணத்தில் வேரூன்றச் செய்கின்றார்களா என்ற சந்தேகம் என்னிடம் இருக்கின்றது

வடக்கு மாகாணத்தில் "விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் போதைப்பொருள் விற்பனையோ - போதைப்பொருள் பாவனையோ இருக்கவில்லை. அவர்களின் காலத்தில் வடக்கில் போதைப்பொருள் சம்பந்தமான எந்தவிதமான பிரச்சினையும் இருக்கவில்லை.

அவர்களுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்துக்கு இராணுவத்தினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிஸார் பெருமளவு வந்ததன் பிற்பாடு இங்கு எந்தவிதத்தில் இவ்வளவு போதைப்பொருள் விற்பனையும் பாவனையும் கூடியது என்பது தொடர்பில் நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த விடயத்தில் பொலிஸார் கூடுமான அளவு அக்கறை காட்டி விசாரணைகளை மேற்கொள்கின்றார்களா? அல்லது அவர்களுடன் சேர்ந்து ஏதாவது நடவடிக்கைகள் நடைபெறுகின்றனவா? என்ற பலவிதமான சந்தேகங்கள் எங்களிடத்தில் எழுகின்றன என தெரிவித்தார். (4-7)

## மாட்டுடன்...

நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்ற இருவர் வீதியின் குறுக்கே உறங்கிக்கொண்டிருந்த மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மற்றையவர் படுகாயம் அடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் வட்டக்கச்சி கட்சன் பகுதியைச் சேர்ந்த பா. ஜெயவீரசிங்கம் என்ற 47 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(4-7,316)

## 3 இலட்சம்...

அவதானிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பணம் வைத்த இடத்தினை பார்த்த வேளை, வைக்கப்பட்ட மேற்குறித்த அளவு பெறுமதியான பணம் களவு போயுள்ளமை தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7,104)

## பயங்கர...

செய்து அறிக்கை ஒன்றை வழங்குவதற்காக குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் உறுப்பினர்கள் தற்போது நாட்டில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பல்வேறு தரப்புடன் இணைந்தும் தனியாகவும் ஆய்வு செய்ய உள்ளனர்.

இதனையடுத்து வழங்கப்படும் அறிக்கைக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனை தவிர பயங்கரவாதத்தை தடுக்க புதிய சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

சர்வதேச நாடுகளுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த பலமான சட்டங்கள் தேவைப்படுகின்றன. இதனால், அது குறித்து தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது எனவும் விஜேதாச ராஜபக்ஷ கூறியுள்ளார். (4-7)

# பங்களாதேஷை வென்று அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்தது பாகிஸ்தான்

பங்களாதேஷுக்கு எதிராக அடிலெய்ட் ஓவல் விளையாட்டரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தீர்மானமிக்க குழு 2 சுப்பர் 12 சுற்று கிரிக்கெட் போட்டியில் 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய பாகிஸ்தான் ஐ.சி.சி இருபது -20 உலகக் கிண்ண அரை இறுதியில் கடைசி அணியாக இணைந்து கொண்டது.

சுப்பர் 12 சுற்றில் தனது முதல் இரண்டு போட்டிகளில் இந்தியாவிடமும் சிம்பாவேயிடமும் கடைசி பந்துகளில் தோல்வி அடைந்த பாகிஸ்தான் தொடர்ச்சியாக நெதர்லாந்து, தென் ஆபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய அணிகளை வெற்றி கொண்டு அரை இறுதியில் விளையாடத் தகுதி பெற்றது.

நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பங்களாதேஷினால் நிர்ணயிக்கப்பட்ட 129 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், வெற்றியை மாத்திரம் குறி வைத்து நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி அதனை நிறைவேற்றிக் கொண்டது.

அணித் தலைவர் பாபர் அஸாமும் மொஹமத் றிஸ்வானும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி ஆரம்ப விக்கெட்டில் 53 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த போது பாபர் அஸாம் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து மொஹமத் றிஸ்வான் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மொஹமத் நவாஸ் 4 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அதனைத் தொடர்ந்து மொஹமத் ஹரிஸும் ஷான் அஹ்மதும் 4 ஆவது விக்கெட்டில் 13 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றி இலக்கை அண்மிக்கச் செய்தனர்.

இப்திகார் அஹ்மத் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்த போதிலும் ஷான் மசூத் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்று பாகிஸ்தானின் வெற்றியையும் அரை இறுதி வாய்ப்பையும் உறுதிசெய்தார்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷின் ஆரம்பம் சிறப்பாக அமைந்தபோதிலும் பின்னர் சரிவுகண்டு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

முதல் 10 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றிருந்த பங்களாதேஷ் கடைசி 10 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 48 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. (க)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2725

### சனா

முயல் வேகமானது தான் ஆனாலும் 8 வருடம் தான் வாழும்

ஆமை மெதுவானது தான் ஆனால் 150 வருடம் வாழும்



அதனால நாம் சோம்பேறித்தனமாக இருப்போம்.

### சர்மி



என்னுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிசமும் ஏன் ஒவ்வொரு நொடியும் அது பாட்டுக்கு போயிடும். நான் பாட்டுக்கு கம்முனு இருப்பேன்.

### அக்ஷனா

இன்னக்கி free Fire, Pubg கேம் விளையாடுற பயலுக எல்லாம்



ஒரு காலத்துல Nokia போன்ல பாம்பு கேம் விளையாடின பயலுக தான்.

### ஆருத்ரன்

அமிர்தம் என்பது சாதத்தில் இல்லை. அதை பிசைந்து தரும் அம்மாவின் கையில் இருக்கிறது.



### கயல்

இந்த உலகம் நீ நன்மை செய்யும் போது உன்னை கவனிக்காது. தீமை செய்யும் போது உன்னை விமர்சிக்காமல் இருக்காது.

### லாகுல்

எதுவுமே செய்யாமல் வீணாகும் வாழ்க்கையை விட எதையாவது செய்யும் போது ஏற்படும் தவறுகள் மிகவும் பயனுள்ளதும் கண்ணியமானதும் கூட



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமூலர் குருபூசையும் நினைவஞ்சலிப் பிரார்த்தனையும்

(யாழ்ப்பாணம்)

திருமூலர் குருபூசை நிகழ்வும் அமரர்களான ஓய்வு பெற்ற சுகாதார கல்வியாளர் கலாபூஷணம் கா.வைத்தீஸ்வரன், ஓய்வுபெற்ற அதிபர் சைவப் புலவர் சு.செல்லத்துரை, பண்டிதர் வை.பேரின்பநாயகம், ஓய்வு பெற்ற பிரதி அதிபர் கா. தம்பிராசா ஆகியோரின் நினைவஞ்சலிப் பிரார்த்தனையும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி, அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் கலாநிதி, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

குறித்த நிகழ்வில் திருமூலர் குருபூசை நிகழ்வு, நினைவுப்பேருரைகள், கலை நிகழ்வுகள் என்பன நடைபெற்று மகேஸ்வர பூசையும் நடைபெறும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு; மக்கள் பிரகடனத்திற்கான ஒன்றுகூடல்

## அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழு அழைப்பு

(சாவகச்சேரி)

**இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு கோரிய 100 நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் நூறாவது நாள் மக்கள் பிரகடன ஒன்றுகூடல்கள் நாளை செவ்வாய்க்கிழமை வடக்கு- கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களில் இடம்பெறவுள்ளன.**

புரையேறிக் கிடக்கின்ற தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான சமஷ்டி அரசியல் தீர்வு வேண்டி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 8 மாவட்டங்களில் குறித்த மக்கள் பிரகடன ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நல்லூர் சங்கிலியன் பூங்காவிலும், அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச பூங்காவிலும், கிளிநொச்சியில் பரந்தன் சந்தி இளைஞர் மட்டம் விளையாட்டு மைதானத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும், வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரசபை மைதானத்திலும், திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை முற்றவெளி வெளியரங்கிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துரைப்பற்று பிரதேச சபை விளையாட்டு மைதானத்திலும், மன்னாரில் மன்னார் பொது விளையாட்டு அரங்கிலும் குறித்த மக்கள் பிரகடன ஒன்றுகூடல்கள் இடம்பெறவுள்ளன.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு கோரி முன்னெடுக்கப்படும் மக்கள் பிரகடன ஒன்றுகூடலில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. (நி-30)


# கண்ணீருடன்...

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும், பிரதம ஆலோசகரும், எமது ஸ்தாபக இயக்குநரின் வலதுகரமாக செயற்பட்டவருமான

மலர்வு 26 . 09 . 1942



உதிர்வு 04 . 11 . 2022

அமரர். பி.எஸ் அல்பிரட்

அவர்களுக்கு எமது நெஞ்சம் கனக்கும் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்கி, அவரது இழப்பால் துயருறும் குடும்ப உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

(A-5225)

குறிப்பு- இன்று பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் புகழுடல் யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. இந் நிகழ்வில் மன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இயக்குநர்கள், அங்கத்தவர்கள், திருமறைக் கலாமன்றம் , 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்


# நல்லூரில் இருந்து கதிர்காமத்திற்கு திருத்தல தரிசன யாத்திரை



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கு இடையேயான பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர் காமத்திற்கு புனித திருத்தல தரிசன யாத்திரை ஆரம்பமாகியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக் கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டு விசேட பூஜை வழிபாடுகளுடன் யாத்திரை ஆரம்பமானது.

ஐப்பசி மாத திருக்கார்த்திகையை முன்னிட்டு ஆரம்பமாகியுள்ள இந்த யாத்திரை மூன்று தினங்களாக நடைபெறவுள்ளது. (நி-33)

# இராசிபலன்

07.11.2022
ஐப்பசி 21, திங்கட்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 4.57 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 1.41 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

சந்திராஷ்டமம்
அத்தம்

வளவன்



**மேஷம்:** கனவு பலிதமுண்டு, பணியில் சிறுமன உளைச்சல் ஏற்படலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமாக ஆதாயம் கிடைக்கலாம்,போசன சுகமுண்டு.



**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.



**துலாம்:** காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**மகரம்:** பெற்றோர் மீதான பாசம் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.



**ரிஷபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.



**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**விருச்சிகம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.



**கும்பம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும், பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.



**மிதுனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**கன்னி:** பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.



**மீனம்:** செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

உண்மையாக அன்புக்காக கொஞ்ச நேரம் நடிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 21





"அச்சமயம் நான் அதைப் பற்றி யோசிக்கவில்லை. இப்போது எண்ணிப் பார்க்கும் போது அவள் ஒரு வேளை காஷ்மீர் தேசத்துப் பெண்ணாயிருக்கலாம்; அல்லது கடல்களுக்கு அப்பாலுள்ள சாவகம், கடாரம், யவனம், மிசிரம் முதலிய நாடுகளிலிருந்து வந்த பெண்ணரசியாகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஒருவேளை அரபு தேசத்துப் பெண்ணாக இருந்தாலும் இருக்கலாம். அந்த நாட்டிலே தான் பெண்கள் பிறந்தது முதல் இறக்கும் வரையில் முகமூடி போட்டே வைத்திருப்பார்களாம்!"

"அச்சமயம் எங்கேயோ சமீபத்திலிருந்து வாத்தியங்களின் முழக்கம் கேட்கத் தொடங்கியது. சல்லி, கரடி, பறை, புல்லாங்குழல், உடுக்கு ஆகியவை சேர்ந்து சப்தித்தன. "இது என்ன முழக்கம்?" என்ற வந்தியத்தேவன் கேட்டான்.

"குரவைக் கூத்து நடக்கப் போகிறது! அதற்கு ஆரம்ப முழக்கம் இது! நீ குரவைக் கூத்து பார்க்க விரும்புகிறாயா? அல்லது சீக்கிரம் உணவு அருந்திவிட்டு நிம்மதியாகப் படுத்துத் தூங்குகிறாயா?"

ஆழ்வார்க்கடியான் குரவைக் கூத்தைப் பற்றிக் குறிப்பிட்டது அச்சமயம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. "குரவைக் கூத்து நான் பார்த்ததேயில்லை; கட்டாயம் பார்க்க வேண்டும்" என்றான். அந்த நண்பர்கள் இன்னும் சில அடி தூரம் சென்று ஒரு திருப்பத்தில் திரும்பியதும் குரவைக்கூத்து மேடை அவர்களுடைய கண்களுக்குப் புலனாயிற்று. மேடைக்கு முன்னால் சபை கூடவும் தொடங்கி விட்டது.

சுற்றிலும் அரண்மனைச் சுவரும் கோட்டை கொத்தளங்களின் மதிலும் சூழ்ந்த இடத்தில், வெண் மணல் விரித்த விசாலமான முற்றத்தில் குரவைக்கூத்து மேடை அமைக்கப்கட்டிருந்தது.

மேடையில் கோழியைப் போலும் மயிலைப் போலும் அன்னத்தைப் போலும் சித்திரங்கள் போட்டு அலங்கரித்திருந்தார்கள். செந்நெல்லை வறுத்த வெள்ளிய பொரிகள், மஞ்சள் கலந்த தினையரிசிகள், பலநிற மலர்கள், குன்றிமணிகள் முதலியவற்றினாலும் அந்த மேடையை அழகுபடுத்தியிருந்தார்கள்.

குத்துவிளக்குகளுடன் தீவர்த்திகளும் சேர்ந்து எரிந்து இருளை விரட்ட முயன்றன. ஆனால் நறுமண அகில் புகையுடன் தீவர்த்திப் புகையும் சேர்ந்து, மூடுபனியைப் போல் பரவி, தீபங்களின் ஒளியை மங்கச் செய்தன. மேடைக்கு எதிரிலும் பக்கங்களிலும் வாத்தியக்காரர்கள் உட்கார்ந்து அவரவர்களுடைய வாத்தியங்களை ஆவேசமாக முழக்கினார்கள். மலர் மணம், அகில் மணம், வாத்திய முழக்கம் எல்லாமாகச் சேர்ந்து வந்தியத்தேவனுடைய தலைசுற்றும்படி செய்தன.

முக்கிய விருந்தாளிகள் அனைவரும் வந்து சேர்ந்ததும், குரவைக் கூத்து ஆடும் பெண்கள் ஒன்பது பேர் மேடைக்கு வந்தார்கள். ஆட்டத்திற்குத் தகுந்தவாறு உடம்பை இறுக்கி ஆடை அணிந்து, உடம்போடு ஒட்டிய ஆபரணங்களைப் பூண்டு, கால்களில் சிலம்பு அணிந்து, கண்ணி, கடம்பம், காந்தள், குறிஞ்சி, செவ்வலரி ஆகிய முருகனுக்கு உகந்த மலர்களை அவர்கள் சூட்டியிருந்தார்கள்.

மேற்கூறிய மலர்களினால் கதம்பமாகத் தொடுத்த ஒரு நீண்ட மலர்மாலையினால் ஒருவரையொருவர் பிணைத்துக் கொண்டவாறு, அவர்கள் மேடையில் வந்து நின்றார்கள். சிலர் ஸ்கைகளில் சந்தன மரத்தினால் செய்து வர்ணம் கொடுத்த அழகிய பச்சைக் கிளிகளை இலாவகமாக ஏந்திக் கொண்டிருந்தார்கள்.

சபையோருக்கு வணக்கம் செய்துவிட்டுப் பாடவும் ஆடவும் தொடங்கினார்கள். முருகனுடைய புகழைக் கூறும் பாடல்களைப் பாடினார்கள். முருகனுடைய வீரச் செயல்களைப் பாடினார்கள். சூரபத்மன், கஜமுகன் முதலிய அசுர கணங்களைக் கொன்று கடல் நீரை வற்றச் செய்த வெற்றிவேலின் திறத்தைப் பாடினார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## கீதா கல்யாணம்

(நேற்றைய தொடர்ச்சி)

உடனே அவள் தன் தகப்பனாரைக் கூப்பிட்டு "அப்பா! இங்கே ஓடி வந்து பாருங்கள் யாரே ஒரு சன்னியாசியோ யோகியோ நம் வீட்டு வாசலில் நினைவு இழந்து விழுந்து கிடக்கிறார்" என்று உரக்கக் கூறினாள். சோமுவும் ஓடி வந்து அந்தச் சன்னியாசியைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் போனான்.

சற்று நேரத்திற்குப் பின் அந்த சன்னியாசியின் மயக்கம் தெளிந்தது. மெதுவாக அவரைப் பற்றிய விபரங்கள் தெரியலாயின. அந்தச் சன்னியாசியின் பெயர் அருளானந்தராம். அவரது வயது நூற்றிருபது வயதாம். அவர் தனது நூற்றிப் பத்தாவது வயதுவரை இமய மலையில் இருந்து தவம் செய்தாராம். இன்னும் இரண்டு வருடங்களில் சமாதி அடைவாரம்.

அதற்கு முன் அவரது குருவின் கட்டளைப்படி தன் சக்தியை நல்லவர் பயன்பட உபயோகிக்க வேண்டும் என்று பாதயாத்திரை கிளம்பி ஊர் ஊராகச் சென்று வருகிறாராம்.

அப்படி மண்ணூருக்கு வந்தவர் களைத்து தன் நினைவிழந்து கீதாவின் வீட்டு வாசலில் விழுந்து விட்டார். அவரைப் பற்றிய விபரங்கள் அன்று மாலைக்குள் ஊர் முழுவதும் தெரிந்து விட்டன. பலர் அந்த மகானை தரிசிக்க பழம், பூவுடன் வந்தனர். ஆனால் எல்லோருக்கும் அவருடன் பேசும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஓரிரு நல்லவர்களுக்கு மட்டுமே அந்த வாய்ப்பு கிட்டியது. அப்படிப்பட்ட பாக்கியவான்களில் மங்கம்மாவின் எதிர் வீட்டுக் காரனான நாராயணனும் ஒருவன். அருளானந்தர் நாராயணனுக்கு ஏதோ மகிமை பொருந்திய வரம் ஒன்றை அருளினாராம். இதை மங்கம்மா கேள்விப்பட்டாள்.

அவள் மனம் பொறுக்குமா என்ன? எதிர் வீட்டுக்காரனுக்கு மகான் வரம் கொடுத்தது போல எனக்கும் ஏன் அவர் கொடுக்கக் கூடாது என்று அவள் மனம் எண்ணியது. அவளுக்கு அந்த மகானை தரிசிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. ஆனால் சோமுவின் வீட்டிற்குள் எப்படிப் போவது என்று தயங்கினாள்.



முடிவில் அவள் சோமுவின் வீட்டிற்குப்போய் அந்த மகானைக் கண்டு தன் வீட்டிற்கு அவர் எழுந்தருள வேண்டும் என அவரிடம் வேண்டிக் கொள்வது என்று முடிவு செய்து கொண்டாள். மங்கம்மா ஒருநாள் அருளானந்தரை தரிசிக்க சோமுவின் வீட்டிற்குச் சென்றாள். ஆனால் அவளுக்கு உடனேயே தரிசனம் கிடைக்கவில்லை.

அவர் அப்போது கீதாவுக்கு ஏதோ மந்திர உபதேசம் செய்து கொண்டிருக்கிறார் என்று மங்கம்மாவிடம் ஒருவர் தெரிவித்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 117

### எஸ்-300 ஏவுகணை

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட அதி நவீன எஸ்-300 ரக ஏவுகணை களை உக்ரைனுக்கு வழங்கியிருக் கிறது அமெரிக்கா. இந்த அதிநவீன ஏவுகணைகள் மூலம் ரஷ்யாவின் போர் விமாணங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன உக்ரைன் படைகள்.

ஒரு S-300 ஏவுகணை அமைப்பு சுமார் US $115 மில்லியன் செலவா கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒவ் வொரு ஏவுகணையின் விலையும் ஒரு மில்லியன் US டொலர்கள் ஆகும்.




### பைரக்டர் TB2 டிரோன்

உக்ரைனுக்கு சுமார் 20 TB2 டிரோன்களை துருக்கி வழங்கியி ருப்பதாகத் தெரிகிறது. உக்ரைனின் முக்கிய நகரங்கள் சிலவற்றில் வான் பகுதி பாதுகாப்பாக இருப்பதற்கு இந்த TB2 டிரோன்கள்தான் பெரிதும் உதவுவதாகச் சொல்லப்படுகிறது.




TB2 drone என்பது தொலை தூரக் கட்டுப்பாட்டில் அல்லது தன்னி யக்க விமானச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் திறன் கொண்ட நடுத்தர உயரமுள்ள சாளரத்தில் (3,000மீ–9,000மீ) நீண்ட நேரத் திற்கு, பொதுவாக 24 முதல் 48 மணி நேரம்வரை பறக்கும் இயல்பு கொண்ட ஆளில்லா போர் விமானம் ஆகும்.

இதில் தரையிலிருந்து கட்டுப்படுத் தக் கூடியதும் தரையிலிருந்து அதனுடன் தகவல் தொடர்பு கொள் ளக் கூடியதுமான அமைப்பைக் கொண்டுள்ளது. UAVகளின் விமா னம் மனிதனால் ரிமோட் கண்ட் ரோலின் கீழ் remotely-piloted-aircraft அல்லது தன்னியக்க உதவி போன்ற பல்வேறு அளவிலான சுயஇயல்புடன் மனித தலையீட்டிற்கு எந்த ஏற்பாடும் இல்லாத முழு தன்னாட்சி விமானம் வரை செயற் படலாம்.

இது உளவுத்துறை, கண்காணி ப்பு, இலக்கை மற்றும் கையகப்ப டுத்தல் பயன்படுத்தப்படுகிறது. இது தாக்குதல்களுக்கான கடினமான புள்ளிகளில் ஏவுகணைகள், anti-tank guided missile மற்றும் வெடிகுண்டுகள் போன்ற விமான ஆயுதங்களை கொண்டு செல்ல உதவுகிறது.

### ரஷ்யா பயன்படுத்தும் ஆயுதங்கள்

அதிநவீன, அதிபயங்கர ஆயுதங் களை தன்னகத்தே கொண்டுள்ள ரஷ்யா, உக்ரைனில் பெரிய அளவில் அவற்றைப் பயன்படுத்தாத வகை யில் தனது போர் யுக்தியை வடிவ மைத்துள்ளது. குறுகிய தூர இலக்கு களைத் தாக்க காலிபர் வகை ஏவுக ணைகளை ரஷ்யா பயன்படுத்தியது. இது துல்லியமாகச் சென்று இலக்கை தாக்கக் கூடியது. 500 கிலோ மீற்றர் தூரம் வரையிலான இலக்குகளைத் தாக்க இஸ்கந்தர் வகை ஏவுகணை கள் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை உக்ரைனின் அண்டை நாடான பெலாரஸில் இரு ந்து ஏவப்பட்டதாக கூறப்படுகிறது.

உக்ரைன் போரில் ரஷ்யாவின் மிகப்பெரிய நம்பிக்கையாக அதன் அதிநவீன பீரங்கி வகைகள் உள்ளன. பியோனி, ஹயாசிந்த், அகாசியா என பூக்களின் பெயர்களைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ள இந்த பீரங்கிகள் பேரழிவை ஏற்படுத்தக் கூடியவை. அதிக உயிர்ப்பலி வாங்கும் கிளஸ் டர் குண்டுகளை ரஷ்யா இந்தப் போரில் பயன்படுத்துவதாக உக்ரைன் கூறியுள்ளது.

போர் விமானத்திலிருந்து வீசப் படும் இந்த கிளஸ்டர் குண்டுகள் இலக்கில் சிறுசிறு குண்டுகளாகப் பிரிந்து விழுந்து வெடித்துச் சிதறும். இதனால் உயிர்ப்பலி அதிகரிக்கும்.

ரஷ்யாவின் மற்றொரு நாசகார ஆயுதவகை தெர்மோபேரிக் ஆயுத ங்கள். இவை வளிமண்டலத்தை சூடாக்கி அங்குள்ள காற்றை கொதி நிலைக்குக் கொண்டு செல்லும். இதனால் தெர்மோபேரிக் ஆயுதத் தின் இலக்கின் கீழ் உள்ள அனை த்தும் எரிந்துவிடும்.

இதைவிட பாஸ்பரஸ் என்பது உலகெங்கிலும் உள்ள இராணுவ ங்களால் புகை, வெளிச்சம் மற்றும் தீப்பற்றல் ஆகியவற்றை ஏற்படுத்து வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பொருளாகும். இது காற்றில் வெளிப்ப டும் போது பிரகாசமாக எரிகிறது மற்றும் அதிக அளவு புகையை உருவாக்குகிறது. (தொடரும்)

## உக்ரைன்–ரஷ்யப் போர்

# எதிர்வரும் வாரங்களில் இரத்த ஆறு ஓடும்

## உக்ரைன் பகிரங்க எச்சரிக்கை

(கீவ்)

**எதிர்வரும் வாரங்களில் உக்ரைன் மற்றும் ரஷ்யப் படைகளுக்கு இடையே கடுமையான சண்டை இருக்கும் எனவும் இரத்த ஆறு ஓடும் எனவும் உக்ரைன் தரப்பு தெரிவித்துள்ளது.**



ரஷ்யாவின் ஒற்றை பகுதியாக அறிவிக் கப்பட்ட கெர்சன் பிராந்தியத்தை கைப்பற்ற ரஷ்யப் படைகள் முழுவீச்சில் களமிறங்கி யுள்ளன. இந்தப் போரில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 600 ரஷ்ய போர் வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என உக்ரைன் அறிவித்துள்ளது.

கெர்சனில் இருந்து வெளியேற்றப்பட் டால் அது உண்மையில் பெரும் பின்ன டைவாகவே கருதப்படும் என ரஷ்ய தரப்பு கூறியுள்ளது.

ரஷ்யாவின் கருங்கடல் கடற்படையின் தாயகமாக கிரிமியா உள்ளது, மேலும் கிரிமியா தீபகற்பத்தை மீட்பதே உக்ரைனின் உறுதியான இலக்காக அவர்கள் தற்போது மாற்றிக்கொண்டுள்ளனர்.

ரஷ்ய துருப்புகளின் தொடர் தாக்குதல்களால் உக்ரைன் தரப்பும் கடுமையான பின் னடைவுகளை எதிர்கொண்டு வருவதாகவே கூறப்படுகின்றது.



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 480 | 500 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 250 | 250 |
| தக்காளி | 450 | 380 | 450 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 150 | 200 |
| கோவா | 350 | 300 | 350 | 320 |
| கரட் | 300 | 380 | 400 | 450 |
| பூசணி | 160 | 200 | 150 | 200 |
| புடோல் | 250 | 300 | 160 | 300 |
| வாழைக்காய் | 160 | 160 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 500 | 600 |
| பெரிய வெங்காயம் | 260 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 500 | 600 | 600 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 140 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 120 | 200 |
| பயற்றங்காய் | 350 | 500 | 350 | 450 |
| லீக்ஸ் | 280 | 300 | 300 | 320 |
| பீற்றூட் | 180 | 260 | 250 | 250 |
| கறிமிளகாய் | 550 | 700 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 350 | 600 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | 450 | 380 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 150 | 150 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 85 | 60-90 |
| இராசவள்ளி | 260 | 250 | 350 | 250 |
| வெங்காயப்பூ | 550 | 400 | 400 | 480 |
| முள்ளங்கி | 140 | 150 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 50 |
| ஈரப்பலா | 80 | 140 | 80 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்) செல்வி.செல்வமலர் செல்வராஜா அவர்களின் பணிநயப்பு வாழ்த்து



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

இன்றைய தினத்தில் மணிவிழாக் காணும் செல்வி.செல்வராஜா செல்வமலர் அவர்கள் தனது கல்விப்புலத்தின் பயணத்தில் பூரணமான மனத்திருப்தி உடனான சேவையை செவ்வனே நிறைவு செய்துள்ளார். 2001 இல் கல்வியியலாளர் சேவை தகைமை பெற்ற நாள் முதல் சிறிபாத தேசிய கல்வியியற் கல்லூரியானாலும் சரி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையானாலும் சரி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பணியின் போதும் சரி விரிவுரை முதல் முகாமைத்துவம் வரை கல்வித் துறையில் உள்ள அனைத்து உறுப்பினர் பணிகளிலும் பொறுப்பு வாய்ந்த முத்திரை பதித்த பெருமகள் என்பதுடன். நிர்வாகத்தில் மேல் உள்ள மற்றும் கீழ் உள்ள அனைத்து உத்தியோகத்தினர்களையும் அனுசரித்துத் தனது செயற்பாட்டில் எந்தவித குறைபாடும் ஏற்படாமல் பணிபுரிந்துள்ளார். "தாமின்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்ற பொய்யா மொழிப்புலவர் கருத்தின் வழி ஆசிரிய மாணவர் பரம்பரை தன்னைப் பின்பற்றத்தக்க வழி ஒன்றைத் தனது தினசரி முறைமை சார் நடைமுறைகளூடாக ஏற்படுத்தி உள்ளார் என்பதுடன். முறைசார் மற்றும் முறைசாரா கல்வி இரண்டும் மாணவர்களில் அறிவு வலிமையை உண்டாக்குகிறது என்பதனை அறிந்து உள்ளார்ந்த மனப் பக்குவம்மிக்க புதிய திட்டங்களை உருவாக்கி அதை பிரயோகித்து வெற்றி கண்டவர். கல்விக்காக துறவு பூண்டு வாழ்வின் பெரும் பகுதியை இரவு பகல் பாராது மாணவ ஆசிரியர் நலன் கருதி விடுதிகளில் கழித்திருகின்றார். எந்த வேலையை பொறுப்பெடுத்தாலும் அது ஒரு பெரிய பணி என்ற போதும் சரி சிறியது என்ற போதும் சரி திருத்தமாக முடியும் வரை கண் துஞ்சார். வயது காரணமாக இவர் மணிவிழா காண்பினும் இவருடைய சேவை கல்விப்புலத்தின் நலனுக்கு இன்னமும் தேவை என்று கூறி அவரை நான் வாழ்த்தி சீர் சிறப்புமிக்க ஆரோக்கியம் மிகு எதிர்கால வாழ்வு பெற இறைவனை வேண்டி அமைகின்றேன்.

**சுப்பிரமணியம் பரமானந்தம், பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**யாழ்ப்பாணம், கோப்பாய்.**



## செல்வி. செல்வமலர் செல்வராஜா மணிவிழா வாழ்த்துச் செய்தி

2001 ஆம் ஆண்டில் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு தெரிவான நண்பர்கள் குழுவிலே "பண்புடைமை" என்ற சொல்லிற்கு இலக்கணமாக திகழ்ந்த ஒரு திறமைவாய்ந்த அமைதியான இனிமையான செயற்றிறன் வாய்ந்த ஓர் ஆசிரிய கல்வியியலாளராக நான் இனங்கண்ட ஒருவரே செல்வி. செல்வமலர் செல்வராஜா ஆவார்.

நீண்டகாலமாக ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் பல்வேறு பதவிகளில் அந்தந்த பதவிகளுக்கே உரித்தான ஆளுமையுடன் செயலாற்றி அக்கல்லூரியின் வளர்ச்சியிலே பெரும்பங்காற்றியுள்ளார். அதனை விட மிகச் சிறந்த கணிதவியலாளராக தொழில் வழிப்படுத்துனராக தன்னுடைய வகிபங்கினை வெளிப்படுத்தி ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் மனங்களில் நீங்காது வாழ்ந்து கொண்டிருப்பவர்.

இவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வியும் தரமேம்பாட்டிற்கும் பொறுப்பாக சேவையாற்றிய காலம் ஒரு பொற்காலம் எனலாம். ஆசிரிய மாணவரது கல்விச் செயற்பாடுகளிலும் கல்லூரியின் ஏனைய செயற்பாடுகளிலும் சவால் மிக்கதொரு காலப்பகுதியில் ஆசிரிய மாணவர்கள் சார்ந்து அவர்களது நலன்களிலே மிக அக்கறை கொண்டவராக கல்விசார் தீர்மானங்களை எடுப்பதிலே சிறந்த தலைமைப் பண்பினை வெளிப்படுத்தியிருப்பது பாராட்டுதற்குரிய ஓர் அம்சமாகும்.

ஒரு கணிதவியலாளராக அவரிடத்தே உள்ள கணித்தின் பண்பான "ஒழுங்குகளை விதிகளை நேர்த்தியாக பின்பற்றுதல்" என்பதை தனது தொழில் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் பின்பற்றி செயற்பட்டிருக்கின்றார். இதனால் சிலவேளைகளில் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்த போதும் அவற்றை தூரநோக்கு எனும் பண்பின் மூலம் வெற்றி கண்டிருக்கிறார்.

தனது ஓய்வு காலத்திலே தனது குடும்பத்தினருடன் இனிமையாக மகிழ்வாக சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

**தி.ஜெயகாண்டீபன்**
**உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



## பணிநயப்பு வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியாக. கல்வியும் தரமேம்பாட்டுக்கும் பொறுப்பாக விளங்கிய செல்வி.செல்வமலர் செல்வராஜா அவர்களின் பணியைப் பாராட்டி. வாழ்த்தி. வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். நாம் உண்மையாக வாழ்வது என்றால் புகழையும் பழியையும் பாராது கடமையைச் செய்வது என்று தான் பொருள். அந்த வகையில் கல்விக்கு பெயர் போன வட மராட்சி மண்ணில் பிறந்து கணித ஆசானாக. கணிதத் துறை ஆசிரிய கல்வியலாளராக. உபபீடாதிபதியாக உண்மையாக வாழ்ந்து காட்டியவராக நான் இவரைப் பார்க்கிறேன். அன்பானவர். நேர்மையானவர். பணிவானவர் இதனால் அவர்

"ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை."

என்பதற்கேற்ப தம்முடன் பணி ஆற்றுபவர்களிடம் பணிந்து வேலை வாங்கும் ஆற்றல் கொண்டவராக விளங்கினார். அவருடன் இணைந்து பணியாற்ற எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

ஒரு சிறந்த ஆசிரியரின் பெருமை அவரிடம் பயின்று அறிவுநலம் பெற்று புகழத்தக்க நிலையில் உயர்ந்து விளங்கும் மாணவர்களின் மாட்சியைக் கொண்டு அளவிட்டு அறியப்படும். செல்வி. செல்வமலர் செல்வராஜா அவர்களிடம் கல்வி கற்றுப் பழகி அறிவாற்றலில் சிறந்தவராகத் திகழ்ந்து புகழ் எய்திய மாணவர்கள் பலர். இதற்குக் காரணம் தெளிந்த சிந்தையராகிக் கசடறக் கற்பிக்கும் ஆற்றலும் அந்த ஆற்றலுக்கு நிகர் அவரேயாகி இருப்பதுவுமாகும்.

அவர் உபபீடாதிபதியாகக் கடமையேற்ற காலத்தில் கொவிட் 19 இன் தாக்கத்தால் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையாக இருந்த போதிலும் மாணவ ஆசிரியர்களின் கல்வியில் சிறிதும் தளர்ச்சி ஏற்படாவண்ணம் அவர் தம் கடமையைச் செவ்வனே செய்து தமக்குரிய பொறுப்பை பகுத்தாராய்ந்து அறியும் திறன். விடாமுயற்சி. தளராநம்பிக்கை. ஆற்றல் மிக்க நிர்வாகத் திறன். ஊக்கம் என்பவற்றால் வெற்றிகரமாக நிறைவேற்றினார். அம்மையார் அவர்கள் இனிவரும் காலங்களில் நல்ல சுக வாழ்வோடும் நிறைந்த ஆயுளோடும் வாழ எல்லாம் வல்ல வித்தக விநாயகர் மற்றும் முடி மன்னர் வைரவர் அருளாசி கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.த.தவநேசன்**
**விரிவுரை இணைப்பாளர் (கல்வியும் தரமேம்பாடும்)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



## Miss Selvamalar Selvarajah

BSc, PGDE(Distrintion), M.Ed, MATE, PGDEM (Merit)
Vice President (Academic & Quality Assurance)
Jaffna National College Of Education

### Service Particulars

| | |
|---|---|
| N / Holy Rosary Tamil Vidyalayam | (16.04.1985 - 23.04.1989) |
| J / Valvai Mahalir Vidyalayam | (24.04.1989 - 28.02.1993) |
| J / Kalady R.C.Boys' School | (01.03.1993 - 28.09.1993) |
| J / Methodist Girls' High School | (29.09.1993 - 09.02.1999) |
| T/Vellaimanal muslim maha vidyalayam | (10.02.1999 - 13.02.2001) |

### Lecturer

| | |
|---|---|
| Sripada National College Of Education | (14.02.2001–09.03.2016) |
| Kopay Teachers' College | (10.03.2016 - 10.06.2020) |

### Vice President

| | |
|---|---|
| Jaffna National College Of Education | (11.06.2020 – To Date) |

## பணிநயப்பு வாழ்த்துப்பாமாலை

கல்வியியல் முகிழ்ந்த செல்வத்து மலரே.
வல்உப பீடத்தின் நல் வளப் புலமே!

நேரிய சிந்தை வழி
நோகாது யாவரையும்
கூரிய செயற்றிறனால்
குறைவின்றி அரவணைத்து
தேறிய ஆளுமையே!
தெளிந்த நற் தோழமையே!

நல் பருத்தித் துறைதனில்
உதிர்த்தெழுந்த வித்தகியே!
செல்வராசா தவமணித்தாய்
சேர்ந்த நற் புத்திரியே!
அள்ள அள்ளக் குறையாத
ஆற்றல் மிகு பேரறிவே!
உள்ளழகே உயர் பொலிவே.
வல்லாளே வாழிய நீர்!

விற்பன்ன முதற்தரத்தின் வினைத்திற முழுதகையே!
தற்பெருமையில்லாத தாராள அரு முகையே!
அற்புதமே. யாழ்.மண்ணின் பொற்பதமே பொக்கிஷமே.
நற்பணியே. நல்லுறவே! நலமுடனே நீடு வாழி!!

**ஆசிரியர் கல்வியாளர் கழகம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

(33368)



## Blessing message from chief commissioner

I am very happy that today's development of Jaffna National College of Education is seen as a model for the colleges of education, which can be considered as the pioneering institutions that provide pre-service training, skills and the courage to face challenges to the teachers.

I consider it as a privilege to forward this blessing message on the day of retirement of Miss.Selvamalar Selvaraja, the Vice President (Academic and Quality Assurance) who too has extended her efficient service to uplift the educational activities of Jaffna National College of Education.

She has been serving in the field of Education for more than 25 years. She had attained her present state not only due to her dedicated service but also for her strong personality, moral conduct, straight forwardness, resilience and diligence.

Miss. Selvamalar Selvaraja, retirement is the end of one phase of life and the beginning of a new, exciting chapter. Congratulations! On behalf of the Ministry of Education I wish her future endeavours.

**Ranjith Chandrasekara**
**Chief Commissioner**
**Teacher Education**

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வழங்கிய மணிவிழா வாழ்த்துச் செய்தி



ஈழவளநாட்டில் தனக்கெனத் தனித்துவமான கல்வி பண்பாட்டுப் பாரம்பரியங்களை கொண்டு விளங்கும் வடமராட்சி மண்ணிலே பிறந்து, கல்வி சேவையதால் உயர்ந்து இன்று மணிவிழாக் காணும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதியும் (கல்வியும் தரமேம்பாடும்) எமது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் கணிதவியல் விரிவுரையாளரும் ஆகிய செல்வி. செல்வராசா செல்வமலர் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபராய் அகம்கிழ்வடைகிறேன்.

வடமராட்சியின் புகழ் பூத்த பெண்கள் பாடசாலையான யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் உயர்கல்வியைக் கற்று அங்கேயே ஆசிரியராக கடமையாற்றிய பின்னர் கல்வியியளாளர் சேவை பரீட்சையில் சித்தி பெற்று கல்வியே கருத்தனம் என்ற நோக்கோடு இயங்கும் ஆசிரியர் கல்வி நிறுவனங்களான ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றி பின்னர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கணிதவியல் விரிவுரையாளராகவும் விரிவுரையாளர் கழகத் தலைவராகவும் பணியாற்றி தற்போது பதவி உயர்வு நிலையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உபபீடாதிபதியாகவும் கடமையாற்றும் காலம் வரை மிக நீண்டகால ஆசிரியர் கல்வித்துறையில் நிலைத்து நின்று தன் அறிவாற்றலாலும் அனுபவவாயிலாகவும் பல ஆசிரியர்களை உருவாக்கித் தானும் கல்வியால் உயர்ந்த பெண்மணியாக மணிவிழா நாயகி செல்வராசா செல்வமலர் அவர்கள் விளங்குகிறார் என்றால் அது மிகையல்ல.

பதவிகளால் மட்டுமல்ல நல்மனப்பாங்கு சார்ந்த பண்புகளாலும் அவர் சிறந்தவராகவே விளங்குகின்றார். விட்டுக்கொடுப்பு, அன்பு, அரவணைப்பு, எல்லோரையும் மதிக்கும் தன்மை, மாணவர்களை அரவணைத்து கல்வி பயிற்றுவிக்கும் தன்மை என பல நல்லொழுக்க பண்புகளின் அணிகலனாகவும் அவர் திகழ்வது அவரோடு பணியாற்றிய காலங்களில் நாம் அறிந்து மகிழ்வடைந்திருக்கின்றோம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றாலும் இன்றும் எமது கலாசாலையுடன் நல்லுறவைப் பேணி வரும்சிறப்பும் இவருக்கு உரியது. இவ்வகையில் இத்தகைய பல சிறப்புகள் கொண்ட கணிதவியலாளர். ஓய்வு காலத்தில் தேக ஆரோக்கியத்தோடு தொடர்ந்தும் சமூகப் பணியாற்றி இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ்வாங்கு வாழ இம் மணிவிழா நன்னாளில் உளமார வாழ்த்துக்கூறி மகிழ்வடைகிறேன்.

**வீ.கருணைலிங்கம், அதிபர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**



## சேவை நாயகிக்கு வாழ்த்துகள்

கடந்த மூன்றாண்டு காலமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் தரமான கல்விக்கும் வலுவான அடித்தளமொன்றை யிட்டு கல்லூரியின் கல்வியும் தரமேம்பாட்டுக்குமான உபபீடாதிபதியாகப் பணியாற்றிய செல்வி. செல்வமலர் செல்வராசா அம்மையாரின் அகவை அறுபதில்பணிநயப்பு வாழ்த்து வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

எளிமையான தோற்றம், அன்பான, அறிவுபூர்வமான வார்த்தைகள், மாணவரிடம் காட்டும் கருணை, உடன் பணிபுரிவோரிடமும் சமூகத்தோடும் இருக்க வேண்டிய நட்புறவு என்பன அம்மையாரிடம் காணப்படும் நற்பண்புகள் ஆகும்.

ஆசிரியராக, கணிதத்துறை விரிவுரையாளராக, உபபீடாதிபதியாக பல துறைகளில் மிளிர்ந்த செல்வி. செல்வராசா செல்வமலர் அவர்கள் காலத்தின் கட்டாயத்தால் சேவையை நிறைவு செய்தாலும் அவரின் ஓய்வுக் காலம் சீருடனும் சிறப்புடனும் அமையவும், அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து கல்விக்கும் சமூகத்திற்கும் பணி செய்யவும் எல்லாம்வல்ல வித்தக விநாயகரையும் முடிமன்னர் வைரவரையும் பிரார்த்திக்கிறேன்.

**அருணாசலம் குகன்,**
**தலைவர், ஆசிரியர் கல்வியாளர் கழகம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.
>
> ~ அறிஞர் அண்ணா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இன்று போய் நாளை வா என்பதும் பலாலி விமான சேவையும் ஒன்றே

சனீஸ்வரனின் பார்வை கடவுளையும் விட்டுவைக்கவில்லை என்று நம்மவர்கள் கூறுவதுண்டு.

சனி பகவானின் தாக்கத்தின் உச்சத்தை உரைப்பதற்காக அப்படியொரு கதை கூறப்பட்டிருக்கலாம்.

எனினும் கணங்களுக்கு அதிபதியான கணபதியாம் விநாயகனை சனீஸ்வரனால் பற்றிப் பிடிக்க முடியவில்லை.

அதற்குக் காரணம் சனீஸ்வரன் தன்னிடம் வரும் போதெல்லாம் இன்று போய் நாளை வா என்று பிள்ளையார் கூறிவிடுவாராம்.

அதன்காரணமாக சனீஸ்வரனின் நோக்கம் இன்னமும் நிறைவேறவில்லை என்பது ஐதிகம்.

இந்தக் கதை பிள்ளையாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ பலாலிக்கும் இந்தியாவுக்குமான விமான சேவைக்கு நன்கு பொருந்தும்.

கூடவே காங்கேசன்துறையில் இருந்து பாண்டிச்சேரிக்கான கப்பல் போக்குவரத்துக்கும் இது உடன்பாடானது.

ஆம், பலாலி விமான நிலையம் இந்திய அரசாங்கத்தால் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இதன்மூலம் பலாலியில் இருந்து இந்தியாவுக்கு விமானத்தில் செல்வதற்கும் இந்தியாவில் இருந்து பலாலிக்கு ஊடாக இலங்கைக்கு வரவும் முடியும்.

இந்த ஏற்பாட்டின் மூலம் இந்தியாவுக்கு அதிகளவில் சென்று வரும் வட பகுதி மக்கள் பலத்த நன்மையடைவர் எனக் கருதப்பட்டது.

அதேபோன்று காங்கேசன்துறைக்கும் பாண்டிச்சேரிக்குமிடையிலான கப்பல் சேவை மூலம் குறைந்த கட்டணத்தில் இந்தியா சென்று வரக்கூடிய வாய்ப்பு இலங்கை மக்களுக்கு கிடைக்கும்.

அதிலும் குறிப்பாக வடபகுதியிலிருந்து இந்தியாவில் உள்ள ஆலயங்களுக்குத் தலயாத் திரை செல்லுகின்றவர்களுக்கு இக்கப்பல் சேவை வரப்பிரசாதமாக அமையும் என நம்பப்பட்டது.

ஆனால் சனீஸ்வரனுக்குப் பிள்ளையார் கூறியதுபோல இன்று போய் நாளை வா என்ற அளவிலேயே குறித்த விமான சேவையும் கப்பல் போக்குவரத்தும் இருப்பதை இங்கு கூறமுடியும்.

உண்மை. பலாலியில் இருந்து இந்தியாவுக்கான விமான சேவை ஆரம்பித்துவிட்டதான தகவல்கள் அடிக்கடி ஊடகங்களில் வெளிவந்தபோதிலும் அது இன்னமும் நிறைவேறவில்லை. அதேபோன்றுதான் கப்பல் சேவையும்.

அரசியல்வாதிகளின் அறிக்கைகள் இந்தா என்பதாக இருந்தாலும் அவை எதுவும் இதுவரை நடந்தாகவில்லை.

மாறாக; குறித்த விமான, கப்பல் சேவைகள் நடைபெறாமைக்குக் காரணம் என்ன? என்று கேட்கும்போது இரு நாடுகளும் குற்றத்தைச் சாட்டுதல் செய்கின்றனவே தவிர, வேறு எதுவும் நடந்தாகவில்லை.

இந்நிலையில் இந்தியாவுக்கு, பலாலியில் இருந்து விமான சேவையும் காங்கேசன்துறையில் இருந்து கப்பல் சேவையும் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இடம்பெறும் என யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கூறியுள்ளார்.

எங்கே அவரின் வாக்கை நம்பி ஜனவரி மாதம் வரை காத்திருப்போம்.

## ஆலயத்தில் திருட்டு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்குப் பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்மாள் ஆலயத்தில் நேற்றுமுன் ஒலிபெருக்கி சாதனம் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

அப்பகுதியில் வசிக்கும் இளைஞர்கள் சிலர் ஆலய மடப்பள்ளியின் கதவு திறந்திருந்ததனை அவதானித்தனர். அதனைத் தொடர்ந்து குறித்த இளைஞர்கள் இந்தவிடயத்தை ஆலய நிர்வாகத்தினரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

ஆலய மடப்பள்ளியின் பூட்டு உடைத்து ஒலிபெருக்கி சாதனம் திருடப்பட்டமையை நிர்வாகத்தினர் உணர்ந்தனர்.

இதனையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7,104)

## நீரில் மூழ்கி சிறுமி உயிரிழப்பு

### நுவரெலியாவில் சோகம்

(நுவரெலியா)

நுவரெலியா கொத்மலை, வெதமுல்ல பகுதியில் சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றை கடக்க முயன்றபோது, குறித்த சிறுமி நீரில் அடித்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் பிரதேசவாசிகளால் சிறுமி மீட்கப்பட்டு நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் உயிரிழந்துள்ளார்.

வெதமுல்ல - கெமில்டன் பகுதியைச் சேர்ந்த 10 வயதுடைய சிறுமியொருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (4-7)

## நீரிழிவு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நீரிழிவு தினத்தினை முன்னிட்டு நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனியும் மருத்துவ முகாமும் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். சத்திரச்சந்தியில் காலை 8.00 மணியளவில் ஆரம்பமாகும் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனியானது யாழ். வைத்தியசாலை வீதியூடாக சென்று யாழ். புதிய பஸ் நிலையத்தை அடைந்து அங்கு விழிப்புணர்வு பிரச்சார உரைகளும் அதனைத்தொடர்ந்து இலவச நீரிழிவு பரிசோதனைகளும், இலவச கண்பரிசோதனைகளும் கண்ணாடி வழங்கல் நிகழ்வும் கலந்து கொள்பவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (4-7,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை [illegible] யாழ். வ[illegible] தேசத்தின் கட்டுடை, SSR Complx கட்டிடத் தொகுதி-கட்டுடை, அரசடி, பிப்பிலி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஆசிக்குளம், மறக்கறம்பளை-கணேசபுரம், சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குட்டரஸை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

எகிப்தின் கெய்ரோவைச் சென்றடைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸை சந்தித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய சுற்றாடல் கொள்கைக்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு ஜனாதிபதி விளக்கமளித்துள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (4-7)

### ஓய்வு பெறும்

## அரச அதிகாரிகளுக்கான வாகன வசதி நிறுத்தம்

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் ஓய்வு பெறும்போது, அவர்கள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனங்களை அவர்களிடமே ஒப்படைக்கும் முறைமையை நிறுத்துமாறு அரச நிறுவனங்களுக்கு திறைசேரி உத்தரவு பிறப்பித்துள்ளது.

திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்தன இது தொடர்பான சுற்றறிக்கையை, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

ஓய்வு பெறும்போது உத்தியோகபூர்வ வாகனங்களின் உரிமையை அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு மாற்றுவது தொடர்பில் அரச நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக்குழுவில் (கோப்) எழுந்த கேள்விகளையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை மாற்றுவதில் அரசுடைமை நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து உட்கொள்கைகளையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்த நிதி அமைச்சகம் முடிவு செய்துள்ளதாக அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அந்நிய செலாவணி நெருக்கடி மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சில அரச நிறுவனங்கள் திறைசேரிக்கு தெரிவிக்காமல் வாகனங்களை மாற்றுவதற்கான ஆவணங்களை அனுப்பியிருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

வாகனத்தின் மதிப்புக் குறைப்புக்குப் பிறகு வாகனங்களை மாற்றுவதற்கு சில நிறுவனங்களின் பணிப்பாளர் சபை தீர்மானங்களை எடுத்துள்ளன.

சிரேஷ்ட அரச அதிகாரிகள், செயலாளர்கள், தங்களது ஓய்வு பெறும் வயதில் அவர்களது வாகனங்களை எடுத்துச் செல்வதை நிறுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானம் நடைமுறையில் இருந்த போதிலும் சில அரச நிறுவனங்கள் தமக்கான சொந்த உபகொள்கைகளை வகுத்துள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4-7)

## கடன் வழங்குனர்களுடனான கலந்துரையாடல் நிறைவு

### ஷெஹான் சேமசிங்க

(கொழும்பு)

கடன் வழங்குனர்களுடன் நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை சுமுகமாக நிறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சீனா, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட கடன் வழங்குனர்களுடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு சட்ட மற்றும் நிதி ஆலோசகர்களின் ஒத்துழைப்பு கிடைத்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (4-7)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

> "ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்."
>
> *-அலெக்சாண்டர் சிமித்(ஸ்கொட்லாந்துக் கவிஞர்)-*

# அரசியல் தீர்வை வலியுறுத்தி கல்மடு நகரில் போராட்டம்



(தருமபுரம்)

மக்கள் அரசியல் தீர்வுடன் கூடிய சுய கௌரவத்துடன் வா்ழ வேண்டும் என வலியுறுத்தி கிளிநொச்சியில் கல்மடு நகர் பகுதியில் கவனயீர்ப்புப் போராட்டம், நடைபெற்றது. வடக்கு கிழக்கு மக்கள் அரசியல் தீர்வுடன் கூடிய சுய கௌரவத்துடன் வாழ வேண்டும் என வலியுறுத்தி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு 100 நாள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்து வருகிறது.

நில அபகரிப்பு ,தொல்லியல் என்ற பெயரில் வனஇலா காணிகளை சுவீகரிப்பு போன்ற விடயங்களை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி 100 நாள் போராட்டத்தின் 98 ஆவது நாளான நேற்று கிளிநொச்சி கல்மடுநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட ராங்கன் குடியிருப்புப் பகுதியில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-316)

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் சிரமதானம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் சிரமதானப் பணிகள் நேற்று பணிக்குழுவினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 8 மணியளவில் மாவீரர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி அகவணக்கம் செலுத்தி சிரமதானப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன..

இந்த சிரமதான பணியில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தங்களுடைய குழந்தைகளின் வித்துடல்களை விதைத்த பெற்றோர்,உறவுகள், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிரமதானப் பணிகளை முன்னெடுத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எருக்கலம்பிட்டியில் அமைக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் வைபவ ரீதியாக கையளிப்பு





(மன்னார்)

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் முதல் கட்டமாக அமைக்கப்பட்ட 75 வீடுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்டோரால் வைபவ ரீதியாக திறந்து வைத்து பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. தலா 13 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த வீடுகளை புயனாளிகளுக்கு கையளித்து வைக்கும் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டீமெல் , தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவர் ஆர்.சூரிய ஆராய்ச்சி, மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப், ஜ.எஸ்.ஆர்.சி நிறுவனத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஏ.மிஹ்லார் குவைத் நாட்டின் இலங்கைக்கான தூதுவரின் இணைப்பாளர்,மன்னார் பிரதேச சபைத் தலைவர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி- 285)

# இந்திய மீனவர்கள் 15 பேர் கைது

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இரண்டு இந்திய படகுகளும் இலங்கை கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை தலைமன்னாருக்கு வடக்கு கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட ரோந்து நட்வடிக்கையின் போது குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு இந்திய மீன்பிடி படகுகள் மற்றும் படகில் இருந்த பதினைந்து இந்திய மீனவர்கள் தற்போது தலைமன்னாருக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (நி)

# 'தேச அபிமானி' விருது



(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திருமதி.நித்திலா ஜேசுசுதாகரன் "தேச அபிமானி" விருதைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை அரசின் நீதி அமைச்சின் கீழ் இயங்கும் சமாதான நீதவான் சம்மேளனத்தினால் வழங்கப்பட்டு வரும் மேற்படி விருதை அண்மையில் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த வைபவத்தின் போது சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பெட்ரிட்டோ வழங்கி வைத்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1979 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: 120 சூரி 2 செவ் 1 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: HNDA,Bcom அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10274

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: சூரி 5 செவ் 3 இல்
உயரம் : 6'
தகைமை/ தொழில்: O/L சாரதி
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/10287

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 45 சூரி 8 செவ் 9 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L வியாபாரம் விவசாயம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10291

பிறப்பு: 1978 கிறிஸ்தவம் RC
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/10297

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: சூரி 9 செவ் 12 இல்
உயரம்:5'1"
தகைமை/தொழில்: MBA (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/11029

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: சூரி 1 செவ் 12 இல்
உயரம்:150 cm
தகைமை/ தொழில்: Bcom அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த மணமகன்
தொ.இ: G/11035

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 30 ½ சூரி , செவ் 9 இல்
உயரம்: 5'1"
தகைமை/ தொழில்: A/L
எதிர்பார்ப்பு: கணவனை இழந்தவர் நிரந்தர தொழில்
தொ.இ: G/11037

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 63 ¼ சூரி 5 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: HNDA பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்
தொ.இ: G/11047

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள்...

வாங்க வந்தோரும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு ஜிபிஎஸ் மைதான வீதிப் பகுதியில் நீண்ட காலமாக கஞ்சா கலந்த மாவா போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த உடுவில் பகுதியைச் சேர்ந்த 45வயதுடைய ஒருவர் நேற்று யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கரின் கீழ் செயற்படும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து மூன்று கிலோ கிராம் கஞ்சா கலந்த மாவா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ள தோடு குறித்த கஞ்சா போதைப் பொருளை வாங்குவதற்கு வந்த கல்வியங்காடு பகுதியை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட கஞ்சா கலந்த மாவா போதைப்பொருள் பற்றி வியாபாரியிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் போது தான் நீண்ட காலமாக யாழ்ப்பாண புறநகர்ப் பகுதிகளின் ஒவ்வொரு இடங்களிலும் கொண்டு சென்று மாவா போதைப் பொருளினை விற்பதாகவும்

தனக்கு நல்ல வருமானம் கிடைப்பதாகவும் நீண்ட காலமாக இந்த தொழிலை மிகவும் சூட்சுமமான முறையில் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்

கைது செய்யப்பட்ட மூவரும் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (4-7,104)

## தனியார் பேருந்...

பேருந்துகளை பொலிஸ் மற்றும் இராணுவ சோதனைச் சாவடிகளில் நிறுத்தி பரிசோதனைக்கு உட்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

A9 வீதியில் பயணிக்கும் தனியார் பேருந்துகள் சில வழி அனுமதிப் பத்திரமின்றி பயணிப்பதாகவும் பயணிகளை ஏற்றுவதில் ஏற்படும் போட்டித் தன்மை காரணமாக விபத்துக்கள் ஏற்படுவதாகவும் ஆளுநருக்கு முறைப்பாடு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் குறித்த பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அதாவது வழி அனுமதிப்பத்திரத்தில் A9 இல் இராணுவம் மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றில் கட்டாயம் நிறுத்தப்பட்டு விவரங்கள் சரிபார்க்கப்பட்டதை உறுதிப்படுத்தி இறுதிச் சோதனைச் சாவடிக்கு தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

கனகராயன்குளம் அல்லது வசதியான பகுதியில் 10 நிமிடங்களுக்கு அனைத்து தூர பேருந்துகளையும் கட்டாயமாக நிறுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-7,104)

## பலாலியில்...

பலாலி விமான நிலையம் இயங்குவதற்கு தயாரான நிலையிலேயே உள்ளது. ஆனாலும் அங்கு விமானங்கள் வர தயாராக இல்லாத நிலைமையே காணப்படுகிறது.

இந்திய விமானங்கள் அங்கு தரையிறங்க தயார் இல்லை. அதனாலேயே விமான நிலையம் இயங்காத நிலையில் காணப்படுகிறது

அதன் போது, பலாலி விமான நிலையத்தில் இருந்த தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளிட்டவை தெற்கில் உள்ள விமான நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன என கேட்டபோது,

அது முற்றிலும் தவறான தகவல். நான் பொய்சொல்லவேண்டிய தேவை இல்லை. பலாலி விமான நிலையத்தில் இருந்து எதுவும் எங்கும் கொண்டு செல்லப்படவில்லை.

இந்திய விமான நிறுவனங்கள் தமது விமானங்களை பலாலியில் தரை இறக்க தயார் எனில் ஒரு இரவில் பலாலி விமான நிலையத்தை இயங்க வைக்க என்னால் முடியும் என தெரிவித்தார். (4-7,104)

## 50 கைதிகள்...

சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில்வெலிகந்த பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், குறித்த புனர்வாழ்வு நிலையத்தில் குழுவினருக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதன்போதே ஒரு குழுவினர் அங்கிருந்து தப்பிச் சென்றதாக கூறியுள்ளார். (4-7)

## தவறி...

சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

சனிக்கிழமை பிற்பகல் திருகோணமலையில் இருந்து யாழ். நோக்கி வந்த பேருந்து பளைப் பகுதியில் வீதியின் நடுவே நின்ற மாட்டினை காப்பாற்ற முற்பட்ட வேளையில் குறித்த தாதிய உத்தியோகத்தர் பேருந்தில் இருந்து தவறி வீதியில் விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

பின்னர் குறித்த உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் விமல்ராஜ் என்ற இளம் தாதிய உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7,30,60)

## முதியவர்களை...

கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வீட்டினுள் புகுந்த இரு திருடர்கள் வீட்டிலிருந்த வயோதிபத் தம்பதியை கட்டி மூர்க்கத்தனமாக தாக்கிவிட்டு 3/4 பவுண் நகை மற்றும் 5 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக வயோதிபர்கள் உள்ள வீடுகளை குறிவைத்து இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் நடத்தப்படுவதாகவும் இது தொடர்பில் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-7)

## லிட்...

எரிவாயு சிலிண்டரின் விலை 30 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 1,750 ரூபாய் ஆகும்.

2.3 கிலோகிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 815 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. (4-7)

## நினை...

எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தின நினைவேந்தல் இடம் பெறவுள்ள நிலையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் சிரமதானம் செய்யப்பட்டு, மாவீரர்களின் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு, இறுதி நாளான எதிர்வரும் 27ஆம் திகதி மாலை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிலையில் மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினரால் நேற்று சிரமதான பணிகள் இடம் பெற்றது.

குறித்த சிரமதான நிகழ்வில் மாவீரர்களின் உறவினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

சிரமதானம் முடியும் நிலையில் துயிலும் இல்லப் பகுதிக்கு வந்த அடம்பன் பொலிஸார் சிரமதானம் மேற்கொண்டமை குறித்து விசாரணைகளை மேற்கொண்டதோடு, எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் தின நினைவேந்தல் மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்து அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் அங்கிருந்து சென்றனர்.

அத்துடன் திருகோணமலை சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்தில் இராணுவம், பொலிஸாரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருடன் பொதுமக்களும் இணைந்து சிரமதானத்தில் நேற்று ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7,285)


மஹஜன சம்பத
திகதி 2022/11/06
சீட்டிழுப்பு இலக்கம் 4931
J 2 0 7 7 6 4

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.11.06
சீட்டிழுப்பு இலக்கம் 240
தனுசு 24 26 29 44 தனுசு

மெகா பவர்
திகதி 06/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1279
L 06 02 31 32 64

கொவிசெத
திகதி 2022.11.06
சீட்டிழுப்பு இலக்கம் 3173
Y 29 56 59 77

தன நிதானய
திகதி - 2022.11.06
சீட்டிழுப்பு இலக்கம் - 961
L 14 21 25 36

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1386
கன்னி 7 2 0 6 9 8

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1732
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2022.11.06
ரூ. 3,036,100/-
23 25 43 62 X

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.11.06
சீட்டிழுப்பு இல: 4067
ரூ. 3,865,020/-
28 33 36 74 Y

ராசி
ரூ. 3,664,286.80
திகதி 2022-11-06
வெற்றி வாரம் 3618
16 21 25 57
ரூ. 7,399,780/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 245
சீட்டிழுப்பு 2022.11.06
ஞாயிற்றுக்கிழமை
26 28 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,780,840/-

வாரம் 27
B 35 13 37 53 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 275,219,195.80
1082
மஞ்சள்
2022.11.06
ஞாயிற்றுக்கிழமை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1906
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.11.06
தினம் ஞாயிற்றுக்கிழமை
P 05 08 14 57
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,284,940/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டைத் திருடி இறைச்சியாக்கிய மூவர் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பகுதியில் சவாரி மாட்டினைத் திருடி இறைச்சியாக்கிய மூவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-7,104)


## கணித வகுப்புக்கள்

**தரம் 6 - 10** வரையான கணித குழு வகுப்புக்களுக்கு

(தமிழ் மொழி மூலமான மற்றும் ஆங்கில மொழி மூலமான) அழைக்கவும்.

பின்வரும் வகுப்புக்கள் ZOOM ஊடாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

| Maths quiz Classes | Maths Paper Classes |
|---|---|
| ⊙ Gr 6 and Gr.7 | ⊙G.C.E O/L, ⊙Gr.10 |
| ⊙ Gr. 8 and Gr.9 | ⊙Gr.9 |

தொடர்புகளுக்கு:- (13360)

**Mr.S.Tharshan 077 454 0529**

## பகுதிநேர வேலைவாய்ப்புகள்

உங்கள் வருமானத்தினை அதிகரிக்க இன்றே பகுதி நேர வேலைவாய்ப்பில் இணைந்து கொள்ளுங்கள்

- Typing
- Photo Designing
- Video Editing
- Social Media Managers

வயதெல்லை 18 - 30

பதிவுக்கட்டணம் 5100/- (நேர்முகத்தேர்வில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு மட்டும்.

தினமும் 500/= - 1000/= வரையான வேதனம். ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிரக்கோவையினை Part time Job எனக் குறிப்பிட்டு Whatsapp / Emailஇல் அனுப்புங்கள்.

(13350)

071 071 6979 winstarvc@gmail.com

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

(13373)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.நகர் பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கு அருகாமையில் மேல்மாடி வீடு மட்டும் வாடகைக்குண்டு.

அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. (13364)

தொடர்பு:- 076 387 1033

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரின் மையப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (13377)

**072 267 6713**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் Medical Facultry இலிருந்து 500 m தூரத்தில் சுற்றுமதிலுடன் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- காணி உரிமையாளர்

**074 134 5805** (13366)

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசாக்கள் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நாளையுடன் பதிவுகள் அனைத்தும் நிறைவடைகின்றன

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எமூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-5981)

**V2 Travels 0768226240 0768226244**


## மரண அறிவித்தல்

### திருமதி அறிவழகன் விஜயாம்பாள்

மலர்வு 09.04.1962 — உதிர்வு 05.11.2022



கரணவாய் வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அறிவழகன் விஜயாம்பாள் அவர்கள் கடந்த 05.11.2022 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரமலை - சரஸ்வதியம்மா தம்பதியரின் அன்பு மகளும் இரத்தினசிங்கம் - முத்துலச்சுமி தம்பதியரின் மருமகளும் இரத்தினசிங்கம் அறிவழகனின் மனைவியும் பிருந்தா, கரிகாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதர்ஷன், சுருதிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிலாஷ், அஸ்மியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் கதிரமலை தவேந்திரனின் பாசமிகு சகோதரியும் தவேந்திரன் திருமகளின் அன்பு மைத்துனியும் நிஷா, நிவியா, அருணா ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2022) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

077 614 1645

(13372)

## மரண அறிவித்தல்

### திருமதி தவநாயகம் சறோஜினிதேவி

பிறப்பு - 15.06.1939 இறப்பு - 29.10.2022



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை, ஜேர்மனி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவநாயகம் சறோஜினிதேவி அவர்கள் கடந்த 29.10.2022 சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேரின்பநாயகம் - நல்லபிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தவநாயகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தனபாலன், சபாநாயகம் மற்றும் யோகநாயகம் (ஜேர்மனி), பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குணாளகுமாரன் மற்றும் தயாளகுமாரன் (டென்மார்க்), சுகுமாரி (ஜேர்மனி), சதீஸ்குமாரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற உதயபாலன் மற்றும் சுபா (டென்மார்க்), தனேந்திராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விதுஷா, நிதுஷா (ஜேர்மனி), அஜந்தன் (டென்மார்க்), சாலினி, சந்தியா, சாரங்கன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இரட்சணியதேவி, திருபாதேவி, கமலாதேவி, மகாதேவி, கணேசமூர்த்தி, பரமேஸ்வரி மற்றும் எமிலி (ஜேர்மனி), சிவகுமாரி (ஜேர்மனி), தற்பராதேவி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2022) ஜேர்மனியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- தனேந்திரன் (மருமகன்)

+94777686713

(13377)


## பங்குச்சந்தை முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்

எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி (சனிக்கிழமை) மு.ப 9.30 மணி முதல் 11.30 வரை

**Tilko Jaffna City Hotel இல்**

அனுமதி இலவசம்

உங்களுக்கு பொருத்தமான முதலீட்டு வழிமுறை சம்பந்தமாக அறிந்து கொள்ள எங்களுடன் இணையுங்கள்

முன்பதிவுகளுக்கு :- 777 105 205 / 021 222 1455

CSE கொழும்பு பங்குப்பரிவர்த்தனை

செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்

(13335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.